

Vol.24 | No. 6 | November 2020

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





3.10.2020
HOLY FAMILY CONVENT
FOUNDATION STONE
ATHENCODU



12.10.2020
THIRUNELVELI
NEW MISSION



3.10.2020
SILVER JUBILEE
CMC PROVINCE
THUCKALAY



23.10.2020
60 YEARS
SACRED HEART
PADANTHALUMOODU

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 24 No :06 NOVEMBER 2020



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம் | 08 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 10 |
| இளையோர் இயக்கம் | 12 |
| இல்வாழ்வு இயக்கம் | 14 |
| வின்சென்ட்-தே-பவுல் சங்கம் | 17 |
| சீனாய் இதழ் | 21 |
| கூரியா செய்திகள் | 23 |
| மறைவட்டச் செய்திகள் | 22 |
| Birthdays & Feastdays | 23 |
| மறைமாவட்ட செய்திகள் | 24 |
| வரவிருக்கும் முக்கிய நிகழ்வுகள் | 26 |
| Bishop's Engagements | 27 |

*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/114/2020**

**31 October 2020**

Dear Readers,

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

On 3 October 2020, Pope Francis signed the third Encyclical of his pontificate on the tomb of Saint Francis of Assisi. It was officially published on Sunday, 4 October, on the feast day of St Francis of Assisi. The phrase fratelli tutti is taken from St Francis of Assisi's sixth admonition to the friars, all of whom were men. In Italian, fratelli means brothers or brothers and sisters since the masculine form of nouns is traditionally used when referring to males and females collectively. Pope Francis says that he was encouraged by a dialogue he had with Muslim leader, Sheikh Ahmad el-Tayeb, grand imam of Al-Azhar Mosque, and by their joint statement that God has created all human beings equal in rights, duties and dignity, and has called them to live together as brothers and sisters. Fratelli Tutti calls for universal fraternity and friendship among all. It aims at promoting a universal aspiration toward fraternity and social friendship. In the background of the encyclical is the Covid-19 pandemic which, Francis reveals, unexpectedly erupted as he was writing this letter. But the global health emergency has helped demonstrate that no one can face life in isolation and that the time has truly come to dream, then, as a single human family in which we are brothers and sisters all. In this circular letter, I want to present a brief summary of the encyclical, which I thought, would encourage you to read the document in its entirety and take home of its salient features.

In the first of eight chapters, which is entitled Dark Clouds over a Closed World, the document reflects on the many distortions of the

contemporary era. They include the manipulation and deformation of concepts such as democracy, freedom, justice; the loss of the meaning of the social community and history; selfishness and indifference toward the common good; the prevalence of a market logic based on profit and the culture of waste; unemployment, racism, poverty; the disparity of rights and its aberrations such as slavery, trafficking, women subjugated and then forced to abort, organ trafficking. It deals with global problems that call for global actions. The Pope also sounds the alarm against a culture of walls that favours the proliferation of organized crimes, fuelled by fear and loneliness.

In chapter 2 entitled Strangers on the Road, the encyclical brings in the inspiring example of a herald of hope: The Good Samaritan. In an unhealthy society that turns its back on suffering and that is illiterate in caring for the frail and vulnerable, we are all called – just like the Good Samaritan – to become neighbours to others, overcoming prejudices, personal interests, historic and cultural barriers. We are, in fact, co-responsible in creating a society that is able to include, integrate and lift up those who have fallen or are suffering. Love builds bridges and we were made for love. The Pope exhorts the Christians to recognize Christ in the face of every excluded person.

The principle of the capacity to love according to a universal dimension is taken up in the third chapter, Envisaging and engendering an open world. Pope Francis urges us to go outside the self in order to find a fuller existence in another. We need to open ourselves up to the other according to the dynamism of charity which makes us tend toward universal fulfilment. The encyclical affirms that the spiritual stature of a person's life is measured by love. It always takes first place and leads us to seek better for the life of the other. It is not selfishness. The sense of solidarity and of fraternity begin within the family, which are to be safeguarded and respected in their primary and vital mission of education.

The right to live with dignity cannot be denied to anyone. Since rights have no borders, no one can remain excluded, regardless of where they are born. In this perspective, the Pontiff calls us

to consider an ethics of international relations, because every country also belongs to foreigners and the goods of the territory cannot be denied to those who are in need and come from another place. Thus, the natural right to private property will be secondary to the principal of the universal destination of created goods. The Encyclical also places specific emphasis on the issue of foreign debt. Although subject to the principle that it must be paid, nonetheless, this should not compromise the growth and subsistence of the poorest countries.

Chapter 4 is entitled A Heart open to the Whole World deals with the theme of migration. With their lives at stake, fleeing from war, persecution, natural catastrophes, unscrupulous trafficking, ripped from their communities of origin, migrants are to be welcomed, protected, supported and integrated. At the same time, unnecessary migration needs to be avoided. To this end, concrete opportunities to live with dignity in the countries of origin need to be created. But at the same time, we need to respect the right to seek a better life elsewhere. In receiving countries, the right balance will be between the protection of citizens' rights and the guarantee of welcome and assistance for migrants. The Pope points out several indispensable steps, especially in response to those who are fleeing grave humanitarian crises: to increase and simplify the granting of visas; to open humanitarian corridors; to assure lodging, security and essential services; to offer opportunities for employment and training; to favour family reunification; to protect minors; and, to guarantee religious freedom. What is needed, above all, is global governance, an international collaboration for migration which implements long-term planning, going beyond single emergencies, on behalf of the supportive development of all peoples.

The title of the fifth chapter is A Better Kind of Politics. The type of politics that the Pope speaks of represents one of the most valuable forms of charity because it is placed at the service of the common good and recognizes the importance of people. They are understood as an open category, available for discussion and dialogue. This type of populism counters the kind of populism that ignores the legitimacy of the notion of people, by attracting

consensuses in order to exploit them for its own service and fomenting selfishness in order to increase its own popularity. But a better politics is also one that protects work, an essential dimension of social life. The best strategy against poverty does not simply aim at containing or rendering indigents inoffensive, but to promote them in the perspective of solidarity and subsidiarity. The task of politics is to find a solution to all that attacks fundamental human rights, such as social exclusion; the marketing of organs, tissues, weapons and drugs; sexual exploitation; slave labour; terrorism and organized crime. The Pope makes an emphatic appeal to definitively eliminate human trafficking, a source of shame for humanity, and hunger, which is criminal because food is an inalienable right.

The politics that we need is a politics centred on human dignity and not subjected to finance because the marketplace, by itself, cannot resolve every problem. The havoc wreaked by financial speculation has demonstrated this. Hence, popular movements have taken on particular relevance. As true torrents of moral energy, they must be engaged in society with greater coordination. In this way, it will be possible to go beyond a policy 'with' and 'of' the poor.

Another hope present in the encyclical is with regard to the reform of the UN. In the face of the predominance of the economic dimension, a task of the UN will be to give substance to the concept of a family of nations working for the common good, the eradication of poverty and the protection of human rights. Through tireless recourse to negotiation, mediation and arbitration, the UN must promote the force of law rather than the law of force.

In the sixth chapter entitled Dialogue and friendship in society, the encyclical speaks about the concept of life as the art of encounter with everyone including with the world's peripheries and with original peoples, because each of us can learn something from others. No one is useless and no one is expendable. The Pope also speaks about the miracle of kindness. It is an attitude to be recovered because it is a star shining in the midst of darkness and frees us from the cruelty, the anxiety and the frantic flurry of activity that prevail in the contemporary era.

The value and promotion of peace is reflected in the seventh chapter, Paths of Renewed Encounter. Here, the Pope underlines that peace is connected to truth, justice and mercy. Far from the desire for vengeance, it is proactive and aims at forming a society based on service to others and on the pursuit of reconciliation and mutual development. Thus, peace is an art that involves and regards everyone and in which each one must do his or her part in a never-ending task. Forgiveness is linked to peace. We must love everyone without exception. But loving an oppressor means helping him/her to change and not allowing him/her to continue oppressing his/her neighbour. Forgiveness does not mean impunity, but rather, justice and remembrance, because to forgive does not mean to forget, but to renounce the destructive power of evil and the desire for revenge. The Pope tells us not to forget the horrors like the Shoah, the atomic bombing of Hiroshima and Nagasaki, persecutions and ethnic massacres. They must be remembered always, anew, so as not be become anaesthetized and to keep the flame of collective conscience alive. It is just as important to remember the good.

Part of the seventh chapter, then, focuses on war as a constant threat. It represents the negation of all rights, a failure of politics and of humanity, and a stinging defeat before the forces of evil. Moreover, due to nuclear, chemical and biological weapons that strike many innocent civilians, today we can no longer think, as in the past, of the possibility of a just war. We must vehemently reaffirm: Never again war! The total elimination of nuclear arms is a moral and humanitarian imperative. With the money invested in weapons, we need to establish a global fund for the elimination of hunger.

Francis expresses a clear position with regard to the death penalty. It is inadmissible and must be abolished worldwide. Not even a murderer loses his personal dignity and God himself pledges to guarantee this. There must be emphasis on the necessity to respect the sacredness of life. Unfortunately, today in some parts of our human family, it appears, can be readily sacrificed, such as the unborn, the poor, the disabled and the elderly.

In the eighth and final chapter, the Pontiff focuses on Religions at the service of fraternity in our world and emphasizes that terrorism is not due to religion but due to erroneous interpretations of religious texts, as well as policies linked to hunger, poverty, injustice and oppression. A journey of peace among religions is possible and that it is, therefore, necessary to guarantee religious freedom, a fundamental human right for all believers.

The encyclical reflects, in particular, on the role of the Church. She does not restrict her mission to the private sphere. While not engaging in politics she does not, however, renounce the political dimension of life itself, attention to the common good and concern for integral human development, according to evangelical principals.

I exhort all of you to read the encyclical and help our people to understand some of the important aspects of this wonderful document that Pope Francis has bequeathed to each one of us.

CONCLUSION

As we conclude the month of October, a month during which we honoured our Blessed Mother through the recitation of the Holy Rosary, let us ask her to intercede for all the intentions of our Eparchy. With the celebration of the 24th Diocesan Day coming near, let us now redouble our efforts at building up the kingdom of God with greater commitment and fervour.

May our Blessed Mother intercede for each one of us!

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

## ஆயர் திருமுகம்

**Bishop George Rajendran sdb**
Diocese of Thuckalay

### "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" (எசா 6:8)

ஈசோ மெசிகாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, இறைமக்களே!

கொரோனா நோய்தொற்று இந்த உலகையும், மனித வாழ்வையும், உலகப் பொருளாதாரத்தையும், தனி மனித, சமூக நம்பிக்கை வாழ்வையும் நிலைகுலையச் செய்திருக்கின்ற இக்காலகட்டத்தில் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறை கொண்டாட ஆண்டவரின் கல்வாரிப் பலியில் பங்கெடுக்க இவ்வாலயத்தில் ஒன்றுகூடி இருக்கின்றோம். "ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில் அவர், எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வை அற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18-19) என்று தன் பணிவாழ்வின் தொடக்கத்திலேயே இயேசு தொழுகைக் கூடத்தில் நற்செய்தியைப் பறைசாற்றத் தொடங்கினார்.

உலகின் கடையெல்லைவரை சான்று பகர, கடவுளின் நற்செய்திப் பணிக்கென ஒதுக்கி வைக்கப்பட்டவன் (உரோ 1:1) என்று நற்செய்தி அறிவிப்பின் திருத்தூதராக பயணித்தார் பவுல் அடிகளார். திருமுழுக்கு பெற்ற எல்லோரும் பொதுக்குருத்துவத்தின் வழியாக நற்செய்தி அறிவிப்பிற்குரிய உரிமையும், கடமையையும் பெற்றிருக்கின்றோம். மறைபரப்புக்கான அழைப்பு நம்மையும் கடந்து இறைவனையும், அயலாரையும் அன்பு செய்து பணிசெய்யவும், பகிரவும், மன்றாடவும் ஓர் வாய்ப்பாக அமைகிறது. பயம் கலந்த இந்தச் சூழலில் கடவுள் நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைத்திருக்கும் இப்பணி நம்மையே நாம் பிறருக்கு கொடுக்க வேண்டும் என்ற புதுப்பிக்கப்பட்ட உணர்வுக்கு அழைத்துச் செல்கிறது. இயங்கிக்கொண்டிருக்கும் இந்த திரு அவையின் மறைத்தூதுப்பணி, சுய விருப்பத்தின்படி செயல்படும் ஒரு நிகழ்ச்சி அல்ல, கிறிஸ்துவே திரு அவையை இயக்குகிறார். நற்செய்தி அறிவிப்பில் தூய ஆவியார் நம்மைத் தூண்டுகிறார். எனவே மறைத்தூதுப் பணி என்பது கடவுளின் அழைப்புக்கு நாம் உணர்ந்து சுதந்திரமாக பதில் தருவது. "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" (எசா 6:8) என ஆண்டவரிடம் சொல்லுவதற்கு இந்த உள்ளார்ந்த, திறந்த மனநிலை மிகவும் அவசியமாகிறது. இதுவே திரு அவையின் எதார்த்தமாக மாற வேண்டும். கடவுளின் அன்புக்கு சான்று பகரவும், அழிவுகளிலிருந்து காப்பாற்றவும், தீமையிலிருந்து விடுவிக்கவும், உலகுக்கும், உலக நாடுகளுக்கும் தேவையானோரை அனுப்ப கடவுள் தேடிக்கொண்டிருக்கிறார். "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" என்று சொல்லி மறைத்தூதுப் பணிக்கு புறப்படுவோம். நற்செய்தி அறிவிப்பின் ஞாயிறாக இருக்கக்கூடிய இந்த ஞாயிறில் நற்செய்தியின் தூதுவர்களாய் நாம் வாழுகின்ற நம் பங்கில், நம் உறவியத்தில் நம் குடும்பங்களில் பயணிப்போம். குறிப்பாக இக்கொரோனா காலகட்டத்தில் நற்செய்தி அறிவிப்பின் வழியாக நம்பிக்கையூட்டும் திரு

அவையாக நாம் செயல்படுவோம். கருணைமிக்க திரு அவையாக இருந்து தொலைந்து போன, விட்டுப் பிரிந்து போன ஆடுகளைத் தேடி கண்டுபிடித்து அரவணைப்போம். நல்ல உலகு அமைவதற்கு இன்று இருக்கின்ற ஒரே உண்மையான வழி நற்செய்தி அறிவிப்பு என்பதை உணர்ந்தவர்களாக இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

வாசகத்திற்கு முன் குத்துவிளக்கு ஏற்றுதல்

நற்செய்தி அறிவிப்பின் ஞாயிறை கொண்டாடும் இன்று நம் சொற்களும், செயல்களும், வாழ்வும் நற்செய்தியைப் பறைசாற்றும் இனிய கருவிகளாக அமையட்டும். நம் வாழ்விடங்கள் இறையாட்சித் தளங்களாகப் பரிணமிக்கட்டும். நற்செய்தியின் மையப்பொருளாகிய நம் ஆண்டவர் இயேசுவைக் குறிக்கின்ற ஒளியினை இப்போது ஏற்றுவோம். நற்செய்தியை அறிவிக்க நம்மை அழைக்கும் இறைவார்த்தைகள் இப்போது முழக்கமிடப்படுகின்றன.

இறைமக்களின் மன்றாட்டுகள்:

1.உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என கட்டளையிடுகின்ற இறைவா, எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும், நற்செய்தி தூதுரைப் பணியின் மாண்பினையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, தங்கள் வாழ்விலும் பணிகளிலும் அதற்கு முன்னிடம் தரவும், நற்செய்தி அறிவிப்புப் பணியில் அவர்கள், இறைமக்களுக்கு வழிகாட்டிகளாகவும் முன்னோடிகளாகவும் இருக்கவும் அருள்தர வேண்டுமென்று, உம்மை மன்றாடுகின்றோம்.

2.உலகின் கடை எல்லை வரை நீங்கள் எனக்கு, சாட்சிகளாகத் திகழ்வீர்கள் என மொழிந்த எம் இறைவா, பொதுநிலையினராகிய நாங்கள், நற்செய்தி தூதுரைக்கும் பணி, துறவியரையும் குருகுலத்தாரையும் சார்ந்தது என எண்ணி ஒதுங்கிக்கொள்ளாமல், அப்பணி ஆற்றிட எங்களையும் நீர் அழைத்துள்ளீர், அது எங்கள் பொறுப்பும்கூட என்பதை நன்கு கண்டுணர எங்களுக்கு உம் தூய ஆவியாரின் ஆற்றலையும் அருள்வரங்களையும் தந்தருள வேண்டுமென்று, உம்மை மன்றாடுகின்றோம்.

திருப்பலி தொடர்கிறது

குறிப்பு: நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு காணிக்கை(Mission Sunday Cover Collection) நவம்பர் 15, 2020 -க்குள் மறைமாவட்ட பொருளாளர் அருட்தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன.

என் [illegible]

ஆயர் இல்லம்

*17.09.2020*

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ச.ச
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை அக்டோபர் 18, 2020 ஞாயிறு அனைத்து பங்குகளிலும் திருப்பலி முன்னுரையாக வாசிக்கவும்.

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ



## குழந்தை ஈசோ இயக்கம்

“சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில், விண்ணரசு இத்தகையோருக்கே உரியது” (மத் 19:14) என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளுக்கு ஏற்ப, குழந்தைகளை இயேசுவுடன் இணைக்கும் நோக்குடன் குழந்தை ஈசோ இயக்கம் செயல்பட்டு வருகிறது.

ஊரடங்கு நாட்களில் குழந்தைகளை இயேசுவில் இணைக்கும் நோக்குடன் WhatsApp வழியாக Tasks கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் விவிலிய வசனம் ஒப்புவித்தல், புனிதர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.



**ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம் ஆறுகாணி மறைவட்டம்**

24.10.2020 அன்று ஆறுகாணி மறைவட்ட ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம், ஆறுகாணி திருக்குடும்ப ஆலயத்தில் வைத்து சுமார் 11 மணியளவில் நடந்தது. இதற்கு மறைமாவட்ட இயக்குநர் தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில்

அவர்கள் தலைமையேற்றார்கள். ஆறுகாணி திருக்குடும்ப ஆலயப் பங்குத்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் அவர்கள் உடனிருந்தார்கள்.

இயக்குநர் தந்தை பேசுகையில், மறைமாவட்ட வெள்ளிவிழாவை முன்னிட்டு ஆயர் தலைமையில் நடத்தப்பட்ட பல்வேறுக் கூட்டங்களைக் குறிப்பிட்டார். ஆயர் அவர்கள் குழந்தைகளுக்கு இறைவசனம் சொல்லிக்கொடுப்பதைக் குறித்தும், புனிதர்களின் வரலாற்றை பிள்ளைகளுக்குப் புரியும் வண்ணம் விளக்குவதைக் குறித்தும் பேசியதை இயக்குநர் தந்தை நினைவு கூர்ந்தார். அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று கூறி தனது உரையை முடித்தார்.

கூட்டத்தில் அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்கள் கலந்து கொண்டு, ஊக்குவிப்பாளர்களுக்கு வகுப்பு நடத்தினார். கத்தோலிக்கத் திருச்சபை பின்னடைவை சந்திக்கிறது என்றும் அதைப் போக்க நாம் திருச்சபையை நேசித்து அதில் வளர வேண்டும் என்றும் கூறினார். மேலும் குழந்தைகளை குடும்ப செபத்தில் பங்கேற்க வைத்தல், திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்றல் போன்றவற்றில் வளர்த்த வேண்டும் என்றும் கூறினார். சீரோ மலபார் மரபுகளில் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் கூறி தனது வகுப்பை முடித்தார்.

கூட்ட முடிவில் திருமதி பீனா சேவியர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

மஞ்சாலுமூடு ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் 24.10.2020 பிற்பகல் 2 மணிக்கு மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலயத்தில் வைத்து, பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் தொடக்க உரை ஆற்ற, இயக்குநர் தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் தலைமையில், அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்களின் வகுப்புடன் நடைபெற்றது.

அருட்தந்தை அலெக்ஸ் அவர்கள் வகுப்பில், குழந்தைகளின் விசுவாசத்தை ஆழப்படுத்துதல், விசுவாச வாழ்வில் பிள்ளைகளின் வளர்ச்சியை உறுதிசெய்தல், உறவுகளை கட்டிக்காத்தல், இறையழைத்தல், புனிதர்களின் வரலாறு போன்ற கருத்துக்களை விளக்கினார்.

கூட்ட முடிவில் வெள்ளிவிழா சிறப்பு நிகழ்வுகள் வரும் ஆண்டில் முன்னெடுக்கப்படும் என்னும் அறிவிப்பு அளிக்கப்பட்டது.

**அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்**
**இயக்குநர்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## ஊரடங்கு வினாடி வினா - இறுதிப்போட்டி

02.10.2020 அன்று தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் சார்பாக மறைமாவட்ட இளையோருக்காக ஊரடங்கு நாட்களில் நடத்தப்பட்ட வினாடி வினாவின் இறுதிப்போட்டி, தெற்றியோடு, புனித பவுல் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. போட்டிகளில் இரு கட்டங்கள் இருந்தன. முதலில் 15 குழுக்கள் பங்கேற்ற எழுத்துப்போட்டி 12.15 மணியளவில் நடைபெற்றது. இதிலிருந்து தேர்வான 4 குழுக்களுக்காக, இறுதிப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. இதில் முதல் இரண்டு இடங்களை படந்தாலுமூடு இளையோரும் மூன்றாம் இடத்தை முஞ்சிறை இளையோரும் பெற்றனர்.

## ஆண்டுவிழா

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் ஆண்டுவிழா, 02.10.2020 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு தெற்றியோடு, புனித பவுல் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் தலைவர் பதவியை, இயக்கத்தின் புரவலர் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் அலங்கரித்தார். விழாவில், பஞ் சாயத்து உறுப்பினராக தேர்வு பெற்ற, பிலாங்காலை ஆன்றோ



ஜோஸ் அவர்களும் சமூகப் பணிகளில் தன்னையே ஈடுபடுத்திக் கொள்ளும் முக்கூட்டுக்கல் ஷாஜி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். விழாவில், இறைவணக்க நடனத்தை தெற்றியோடு புனித பவுல் ஆலய இளையோர் ஆடினர். விருந்தினர்களை, தக்கலை

இளையோர் இயக்கத்தலைவர், ஜெசின் அவர்கள் வரவேற்றார். அறிக்கையை ஷீஜி மோள் அவர்கள் முன்பதிவுச் செய்யப்பட்ட காணொளி மூலமாக அவை–யின்கண் வைத்தார். ஆயர் அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில், TCYM ஊரடங்கு நாட்களில் செய்த ஆன்மீக சேவையை பெரிதும் பாராட்டியதோடு, இளையோர் இயேசுவின் அழைப்புக்கு ஏற்ப வாழ வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

விழாவின் போது, கடந்த இரண்டு ஆண்டுகளில் நடுவண் செயற்குழு உறுப்பினர்களாக பல்வேறு பொறுப்புகளை வகித்த ஜினோ, ஜெசின், அபிமோள், அஜீஷ், ரெஜிதா, இராஜேந்திர பாபு, ஸ்டார்வின், பபிஷா ஜூலிட், ஷீஜி மோள், மெரின் சுஜித், ஜெனிஷா, ராபின் ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்கள் ஒவ்வொருவரைக் குறித்த சிறு காணொளித் தொகுப்பும் காண்பிக்கப்பட்டு, ஆயர் அவர்களால் கவுரவிக்கப்பட்டனர். மேலும், மறைமாவட்ட அருட்பணிப் பேரவையில் இளையோர் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜினோ, ஜெசின், ரெஜிதா, அஜீஷ், தினேஷ், எட்பின், ஜாண் பாப்டி, மேரி ஷைனி, ஏஞ்சல் மற்றும் வினி மோள் ஆகியோருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, ஆயர் அவர்களால் கவுரவிக்கப்பட்டனர்.

மேலும், ஊரடங்கின் தொடக்க நாட்களில் 'கோவிட் வித் ஜீசஸ்' என்னும் பெயரில் இணையம் வழியாக மறைமாவட்ட மக்களுக்காக நடத்தப்பட்ட 10 நாள் 10 டாஸ்க் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அனைவருக்கும் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. ஆயர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

ஊரடங்கு நாட்களில் வினாடிவினாப் போட்டிகளில் பங்கேற்று இறுதிப் போட்டியில் வென்ற குழுக்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்பட்டது. பரிசுத்தொகைகளை, India Steels படந்தாலுமூடு உரிமையாளர் ஆஸ்டின் அவர்களும், AJR Developers திருவனந்தபுரம் உரிமையாளர் அஜின் ஆன்றோ அவர்ளும், Bonifon Tech Pvt. Lmt. தக்கலை உரிமையாளர் எட்வின் அவர்களும் அளித்தார்கள்.

நிகழ்வின் இடையே வயலங்கரை புனித அந்தோணியார் இளையோர்கள் நடனமாடினர். ரெஜிதா, ஆன்றோ ஜோஸ் மற்றும் ஜினோ ஆகியோர் தங்கள் இளையோர் இயக்க அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களுக்கு நடுவண் செயற்குழு இளையோர் சார்பாக நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்வில், அருட்தந்தையர் அஜீஷ் அட்டியில், ரோபின் ஜோஸ், ஜாண் பாஸ், பிரிண்டோ குரியாஸ் ஆகியோர் பங்கேற்றனர். அனைவருக்கும் இயக்குநர் தந்தை நன்றி கூற விழா மாலை 5.00 மணிக்கு முடிவடைந்தது.

**ஷீஜி.**
**செயலர்**

# இல்வாழ்வு இயக்கம்



இறைவா பிறரிடம் ஆறுதல் தேடுவதை விட, பிறருக்கு ஆறுதல் தரவும், பிறர் என்னைப் புரிந்திட வேண்டுமென்பதை விட, நான் பிறரைப் புரிந்துக் கொள்ளவும், பிறர் எனக்கு அன்பு செய்ய வேண்டுமென்பதை விட, பிறருக்கு நான் அன்பு செய்திடவும் உதவி செய்வீராக! ஏனெனில் தன்னல மறுப்பிலேதான் பொது நலமும், மன்னிப்பிலே தான் பெருமன்னிப்பும், இறப்பிலேதான் மரணமில்லாப் பெருவாழ்வும் பெற முடியும்.

- அன்னைத் தெரசா

**இல்வாழ்வு இயக்கம்**

குடும்பங்களில் திருக்குடும்பத்தைப் போல அன்பும் ஒற்றுமையும் நிலவ வேண்டும் என்னும் நோக்கத்துடன் இல்வாழ்வு இயக்கம் செயல்பட்டு வருகிறது. இந்நோக்கத்தை செயல்படுத்தும் விதமாக, தம்பதியரிடையே ஏற்படும் புரிதலின்மைகளையும் குழப்பங்களையும் போக்க ஆலோசனைகள் மற்றும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் இயக்க மையத்தில் முன்னெடுக்கப்படுகிறது. குடிநோய்க்கு அடிமையானவர்களுக்கு மருந்தும் ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. மேலும் மனநலம் குன்றியோருக்கு ஆலோசனைகளும் மருந்துகளும் அளிக்கப்படுகின்றது. பல்வேறு வயதினருக்கு ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது.

**மாதர் ஜோதிஸ் இயக்கம்**

ஒரு குடும்பத்தின் தாய், அன்பில் நிலைத்திருந்தால் அக்குடும்பம் அன்பில் வளரும். ஆகையால் குடும்பத்தில் தாய் இறைவார்த்தையை வாசிக்க வேண்டியது அவசியமாகிறது. இதை ஊக்குவிக்கும் நோக்குடன் இணையவழி விவிலியப்போட்டி ஒவ்வொரு புதன்கிழமையும் இரவு 8 மணி முதல் 8.10 வரை நடைபெற்று வருகிறது. வாரம் பத்து அதிகாரங்கள் வாசிப்பதற்காகக் கொடுக்கப்பட்டு அதிலிருந்து 10 வினாக்கள் கேட்கப்படுகிறது. இதில் 120 க்கும் மேற்பட்ட தாய்மார்கள் பங்கேற்கிறார்கள். WhatsApp மூலமாக பதில்களும் முடிவுகளும் வெளியிடப்படுகிறது.

**திருமண ஆயத்தப்பயிற்சி**

திருமண ஆயத்தப்பயிற்சி 2020 அக்டோபர் 2 மற்றும் 3 தேதிகளில்

படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதில் 32 பேர் கலந்து கொண்டனர். ஊரடங்கு நாட்களில் மொத்தம் 79 பேர் பங்கேற்று பயனடைந்துள்ளார்கள். அவர்களின் விபரம் கீழ்த்தரப்படுகிறது.



| PARTICIPATED LIST FOR MARRIAGE PREPARATION COURSE FROM FEB TO OCT 2020 | | |
|---|---|---|
| **PADANTHALUMOODU FORANE** | | |
| **S.NO** | **PARISH** | **NO OF CANDIDATES** |
| 1 | ST.THOMAS CHURCH, PALUKAL | 8 |
| 2 | ST.MARTIN DE PORES CHURCH, KAZHUVANTHITTAI | 3 |
| 3 | SACRED HEART CHURCH, PADANTHALUMOODU | 3 |
| 4 | ST.MATHEW CHURCH, ANNIKARAI | 1 |
| **MANJALUMOODU FORANE** | | |
| 1 | ST.BENEDICT CHURCH, BENGIRI | 5 |
| 2 | ST.THOMAS CHURCH, MUZHUCODE | 5 |
| 3 | ST.LITTLE FLOWER CHURCH, MANJALUMOODU | 5 |
| 4 | HOLY FAMILY CHURCH, MUKKUTUKAL | 5 |
| 5 | HOLY CROSS CHURCH, MALAICODE | 1 |
| **SOOSAIPURAM FORANE** | | |
| 1 | CHRIST THE KING CHURCH, PALLAPALLAM | 1 |

| | | |
|---|---|---|
| 2 | ST.LORETTO MATHA CHURCH, PILANKARAI | 1 |
| 3 | ST.HOLY FAMILY CHURCH, THACKALIVILAI | 4 |
| 4 | DEVA MATHA CHURCH, KILLIYOOR | 1 |
| 5 | ST.JOSEPH CHURCH , SOOSAIPURAM | 1 |
| 6 | ST.JAMES CHURCH , MANGARAI | 5 |
| **THUCKALAY PILANKALAI FORANE** | | |
| 1 | ST.MARYS CHURCH, THUCKALAY | 1 |
| 2 | LITTLE FLOWER CHURCH, PILANKALAI | 1 |
| **NITHRAVILAI FORANE** | | |
| 1 | ST.ANTONY CHURCH, VAYALINKARAI | 4 |
| 2 | ST.XAVIER CHURCH, VARUTHATTU | 6 |
| 3 | ST.GEORGE CHURCH, MUNCHIRAI | 5 |
| 4 | ST.CHRISTHU RAJA CHURCH, CHRISTHURAJAPURAM | 1 |
| 5 | AMAL MARY CHURCH, CHEENIVILAI | 2 |
| 6 | JAYAMATHA CHURCH, NITHRAVILAI | 1 |
| **KALIYAL FORANE** | | |
| 1 | ST.MARY CHURCH KALIYAL | 2 |
| 3 | ST.THOMAS CHURCH, MARAPADY | 2 |
| 4 | SACRED HEART CHURCH, PALLIKONAM | 2 |
| **ARUKANI FORANE** | | |
| 1 | HOLY FAMILY CHURCH , ARUKANI | 2 |
| 2 | ST.THOMAS CHURCH, PATHUKANI | 1 |
| | **TOTAL NO OF CANDIDATES = 79 NOS** | |

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்

இயக்குநர்




# தக்கலை மத்திய சபை

**பொறுப்பாளர்கள் பொறுப்பேற்பு விழா**

தக்கலை மத்தியப் பேரவையின் 5 ஆவது தலைமைப் பணியாளர் சகோ. மு. றாபி மற்றும் பொறுப்பாளர்களின் பணிப் பொறுப்பேற்பு விழாவானது 15.08.2020 அன்று உத்திரங்கோடு ஓசானாம் உயர்க்கல்வி நிலையத்தில் வைத்து பிற்பகல் 2.30 மணியளவில் தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார். ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் செபமாலையுடன் இனிதே ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெற்ற பொறுப்பேற்பு விழா நிகழ்ச்சியில், தொடக்க செபத்துடன் ஆரம்பித்து விவிலியம் மற்றும் கையேடு வாசிக்கப்பட்டது. முன்னாள் தக்கலை மத்தியசபைத் தலைமைப் பணியாளர் சகோ. ஜயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து ஆயர் அவர்களால் குத்து-விளிக்கேற்றப்பட, அதிலிருந்து சுடரேற்றப்பட்ட, எரிகின்ற திரிகளானது அனைத்துப் பொறுப்பாளர்களின் கைகளிலும் கொடுக்கப்பட்டன. ஆயர் அவர்களின் தலைமையில், ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் முன்னிலையில் இந்திய தேசிய தலைமைப் சபையின் சமரசக்குழு உறுப்பினர் சகோ. சௌந்தரராஜ் அவர்கள் தலைமையில் பணியாளர் சகோ. மு. றாபி அவர்களுக்குப் பணி ஏற்பு உறுதி மொழி செய்து வைக்கப்பட்டது. பின்னர் தலைமைப்பணியாளர் அவர்கள் மத்திய சபையின் பிற பொறுப்பாளர்களுக்கு பணி ஏற்பு உறுதிமொழி செய்து வைத்தார். பின்னர் ஆயர் அவர்களும் ஆன்மீக ஆலோசகர் தந்தை அவர்களும் வாழ்த்தும் ஆசியும் தெரிவித்தனர். நிகழ்வானது சகோ. மு. றாபி அவர்களின் நன்றி உரையுடனும் ஆயரின் இறுதி ஆசியுடனும் இனிதே முடிவடைந்தது.

**புனித வின்சென்ட் தே பவுல் மத்தியசபை**
**தக்கலை மறைமாவட்டம்**

1. புரவலர் – மேதகு ஆயா:. ஜார்ஜ் இராஜேந்திரன், SDB
2. ஆன்மீக ஆலோசகர் – பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில்
3. சிறப்பு அழைப்பாளர் – சகோ. தேவராஜ்
4. சிறப்பு அழைப்பாளர் – சகோ. ஜோஸ் பெருமனா

5. தலைமைப் பணியாளர் – சகோ. மு. நாபி
6. மூத்த துணைத்தலைவர் – சகோ. சௌந்தர்ராஜ் (ஓசானாம் கல்விநிலையம்)
7. துணைத்தலைவர் – சகோ. ஜய்யாத்துரை (காருண்ணிய நிதிகாப்பாளர்)
8. செயலர் – சகோ. சோணிக் ரீகன்
9. பொருளர் – சகோ. ஜாண் றிகேஷ்
10. திட்ட அலுவலர் – சகோ. ஜாண்
11. சுவிகார அலுவலர் – சகோ. எட்வின்சன்
12. கல்வி திட்ட அலுவலர் – சகோ. வின்செண்ட்ராஜ்
13. ஆன்மீக பயிற்சியாளர் – சகோ. சசிகலா விஜயகுமாரி
14. ஜூபி கடன் அலுவலர் – சகோ. லாறன்ஸ்
15. தகவல் தொடர்பு பொறுப்பு அலுவலர்– சகோ. ஷாஜி
16. விரிவாக்கமும், புதுப்பித்தலும் – சகோ.ஜெபமணி
17. இளைஞர் ஊக்குநர் (ஆண்) – சகோ. ஜெனலட் ராஜ்
18. இளைஞர் ஊக்குநர் (பெண்) – சகோ. சஜிதா
19. மகளிர் ஊக்குநர் – சகோ. லதா
20. துணை செயலர் – சகோ. அபீஷ்
21. துணை பொருளர் – சகோ. சேவியர்
22. திட்ட மேற்பார்வையாளர் (1) – சகோ. சிபுமோன்
23. திட்ட மேற்பார்வையாளர் (2)– சகோ. செல்வன்
24. திட்ட மேற்பார்வையாளர் (3)– சகோ. ஷாஜன்

**மரக்கன்று வழங்கும் விழா - பாலப்பள்ளம் கிறிஸ்து ராஜா கிளைச்சபை**

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் கிறிஸ்து ராஜா கிளைச்சபை சார்பில் 13.9.2020 ஞாயிறு திருப்பலியைத் தொடர்ந்து மரக்கன்றுகள் வழங்கும் விழா, கிளைச்சபையின் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ஜாண்பால் அவர்களின் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. சகோ. ஜஸ்டின் தாஸ் அனைவரையும் வரவேற்றார். தலைமையுரை ஆற்றிய தந்தை, வின்செந்தியர்களின் செயல்பாடுகளைப் பற்றிக் கூறி வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறியதோடு, மரக்கன்றுகள் வழங்குவது சிறப்புக்குரியது என்றும் கூறினார். ஆலயத்–திலிருந்து அளிக்கப்படும் மரக்கன்றுகள் ஆசியின் அடையாளமாக இருக்கிறது என்று அருட்தந்தை மக்களுக்குக் கூறினார். நிகழ்வுக்கு முன்னிலை வகித்த குசைபுரம் வட்டாரச் சபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் அவர்கள், நிகழ்வு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்றதோடு, வட்டாரச்சபைகளுக்கு ஒரு முன்மாதிரியாக இந்நிகழ்வு நடக்கிறது



என்றார். அன்றைய தினம் சுமார் 50 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. முன்னாள் மத்திய சபைத்தலைவர் சகோ. ஜயாத்துரை உட்பட திரளானோர் நிகழ்வில் பங்கேற்றனர். சகோ. எட்வின்சன் கூட்டத்தினருக்கு நன்றி கூறினார். தொடர்ந்து அனைத்துக் குடும்பங்களுக்கும் தென்னம்பிள்ளை அளிக்கப்படும் என்னும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**வயலங்கரை - புனித அந்தோணியார் கிளைச்சபை**

வயலங்கரை புனித அந்தோணியார் கிளைச்சபைக் கூட்டமானது எல்லா வாரங்களிலும் ஞாயிறு திருப்பலிக்குப் பின்னர் நடத்தப்பட்டு வருகிறது. புனித வின்செண்ட் தே பவுல் மற்றும் அருளாளர் பிரடரிக் ஓசானம் ஆகியோரின் திருவிழாவானது 2020, செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி, ஞாயிறு அன்று சிறப்பிக்கப்பட்டது. காலைத் திருப்பலி வின்செந்தியர்களால் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலியின் இறுதியில்



மூத்த வின்செந்தியர்கள் கவுரவிக்கப்பட்டார்கள். மேலும் மரக்கன்றுகள் மூத்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அன்றைய தினம் ரூ. 6000 தத்துக் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டது. மருத்துவ உதவியாக ரூ. 1500 வழங்கப்பட்டது. நிகழ்வுகள் அனைத்திலும் கிளைச்சபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் அவர்கள் பங்கேற்று வாழ்த்துக்கள் கூறினார். இவ்விழாவை ஆண்கள் சபையும் பெண்கள்

சபையும் இணைந்து நடத்தியது.

**ஜெயமாதா கிளைச்சபை - நித்திரவிளை**

நித்திரவிளை ஜெயமாதா கிளைச்சபையும் லிட்டில் ப்ளவர் பெண்கள் கிளைச்சபையும் இணைந்து 27.09.2020 அன்று புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் அருளாளர் பிரடரிக் ஓசானம் ஆகியோரின் திருவிழாவை



சிறப்பித்தது. அன்றைய தினம் திருப்பலிக்குப்பின் சுழற்சி முறையில் கடனுதவி திட்டத்திலிருந்து 13 நபர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டது. கடனுதவியை வட்டாரச் சபை ஆன்மீக ஆலோசர் அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வழங்கினார். நிகழ்வில் மத்தியச் சபை தலைமைப்பணியாளர் சகோ. றாபி மற்றும் திட்ட அலுவலர் திரு. ஜாண் ஆகியோரும் கலந்து கொண்டனர். அனைவரையும் வட்டாரச் சபைத் தலைவர் ஜோஸ் வரவேற்றார். கடனுதவி திட்டமானது ஆண்கள் கிளைச்சபை சார்பாக 10 பேருக்கும் பெண்கள் கிளைச்சபை சார்பாக 3 பேருக்கும் வழங்கப்பட்டது. இறுதியில் நித்திரவிளை வட்டார முன்னாள் தலைவர் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

**புனித ஜார்ஜியார் கிளைச்சபை - ஆனையடி**



ஆனையடி புனித ஜார்ஜியார் கிளைச்சபைச் சார்பாக ரூ. 10000 ரூபாய், ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் தலைமையில் மருத்துவ உதவியாக அளிக்கப்பட்டது.

**சகோ.ஷாஜி**

**செய்தித்தொடர்பாளர்**

# சீனாய் இருமாத இதழ் செய்திகள்



# சீனாய் இதழ் மறு வெளியீடு

சீனாய் இதழ் மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிச்சம் கண்டுள்ளது. கடந்த ஓராண்டு காலமாக பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக வெளிச்சம் காணாத இதழ் தற்போது, ஆயர் அவர்களின் நிரந்தர ஊக்குவிப்பின் பயனாலும், பல இளையோரின் முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய இதழானது தெற்றியோடு புனித பவுல் ஆலயத்தில் வைத்து 09.10.2020 அன்று பிற்பகல் 3 மணக்கு வெளியிடப்பட்டது. நிகழ்வில், தக்கலை மறைமாவட்ட தலைமைச்செயலர் பேரருட்த்தந்தை தோமஸ் சத்தியநேசன், எழுத்தாளர் வ. ஆன்றணி ஜோசப், எழுத்தாளர் குமரித்தோழன், எழுத்தாளர் பி.எஸ். ராஜேஷ், திரு. கிறிஸ்துதாஸ், திரு. பிரைட் மற்றும் இளையோர் பங்கேற்க, இதழ் ஆசிரியர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் முன்னிலையில் நடைபெற்றது.




அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இதழின் முதல் பிரதியை அருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் அவர்கள் வெளியிட எழுத்தாளர் ஆன்டணி ஜோசப் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அருட்தந்தை அவர்கள் ஆயரின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, இதழ் சுமந்து தரும் நற்சிந்தனைகள் மக்களை நல்வாழ்விற்கு இட்டுச் செல்லும் என்று வாழ்த்தினர். திரு. ஜாண் (குமரித்தோழன்), திரு. பி.எஸ். ராஜேஷ், திரு கிறிஸ்துதாஸ் ஆகியோர் வாழ்த்துரை கூறினர்.

இதழ் வெளியிட முக்கியக் காரணமாக இருந்த, ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும், பொருளர் பேரருட்த்தந்தை ஜோண்சிலால் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இதழுக்கான சந்தாதாரர்களை சேர்க்கும் பணியில் ஈடுபடும் குழுவிற்கு தலைமையேற்றிருக்கும் திரு. ரெதீஷ் அவர்களை வாழ்த்துகிறோம். இவர்களுக்கு பேருதவி அளித்து வரும் அனைத்து அருட்தந்தையருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

# மறைவட்டச் செய்திகள்

## சூசைபுரம் மறைவட்டம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் - பாலப்பள்ளம்

27.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பங்குத்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

02.10.2020 அன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு ஆயர் அவர்கள் இணையம் வழியாக (ZOOM MEET) வழியாக பங்கு மக்களோடு உரையாடினார். அந்நிகழ்வில் பங்குத்தந்தை அவர்கள் வரவேற்புரை கூறினார். பங்குமக்களின் சந்தேகங்களுக்கு ஆயர் பதிலளித்தார். ஆயரின் இறுதி ஆசியுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

4.10.2020 அன்று பங்குப் பொதுமன்றம் கூட்டப்பட்டது. அப்போது நவம்பர் 18 ஆம் தேதி தொடங்கி 22 வரை பங்குத்திருவிழா நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

18.10.2020 அன்று பங்குத்தந்தையின் பெயர் கொண்ட, புனித ஜாண் பால், திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குச் சார்பாக அருட்தந்தை அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. தந்தையின் ஏற்புரை மற்றும் ஆசியுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

### திருக்குடும்ப ஆலயம் – தக்காளிவிளை

21.09.2020 அன்று புத்தாலய அர்ச்சிப்பின் மூன்றாமாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. மறைமாவட்டத்தில் புதிதாக அருட்பொழிவு பெற்ற, அருட்தந்தையர்கள் டோஜி மற்றும் ரோபின் ஆகியோர் திருப்பலிக்குத் தலைமை ஏற்றார்கள். பங்குத்தந்தை சுபின் அவர்கள், ஊரடங்கு நாட்களில் விவிலியப் போட்டிகளில் இணையம் வழியாக பங்கேற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

25.09.2020 அன்று பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

**ஆலயத்திருவிழா**

4.09.2020 முதல் 08.09.2020 வரை பங்குத் திருவிழா பங்குத்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் எளிமையாக நடைபெற்றது.

11.10.2020 அன்று பங்குப்பேரவைக் கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.

**செபமாலை பவனி**

19.10.2020 முதல் 25.10.2020 வரை, அக்டோபர் மாதத்தை முன்னிட்டு செபமாலை குருசடியில் சிறப்பாக செபமாலை நடைபெற்றது. எல்லா நாட்களிலும் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இறுதி நாளில் கோயில் வளாகத்தில் செபமாலை பவனி நடைபெற்றது.

# கூரியா செய்திகள்

- அணக்கரா தியான இல்லத்தில் தியானம் மேற்கொண்டு வந்த அருட்தந்தையர் கிறிஸ்துதாஸ் மற்றும் அனில் ராஜ் ஆகியோர் அக்டோபர் 7, 2020 அன்று மறைமாவட்டத்திற்கு திரும்பினர்.
- மறைமாவட்ட ஆயர் ஆலோசனை மன்றம் மற்றும் அருட்தந்தைப் பேரவையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்த அருட்தந்தை மாத்யு குழிஞ்ஞாலில் அவர்கள் இக்கூட்டங்களில் நீண்ட நாட்களாக பங்கேற்க இயலாததால் அவர் இம்மன்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இது 24.10.2020 அன்றிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது.
- அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் மறைமாவட்ட ஆயர் மன்றம் மற்றும் அருட்தந்தையர் ஆலோசனை மன்றங்களின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இது 24.10.2020 அன்றிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது.

## BIRTHDAYS OF REV FATHERS

| BIRTH DAYS - NOVEMBER - 2020 | |
|---|---|
| Fr. Abilash Xavier Raj S. | 16 |
| Fr. John Thekkel | 20 |
| Fr. Joshy Thadiyananickal CMI | 27 |

## FEAST DAYS OF REV FATHERS

| FEAST DAY - NOVEMBER - 2020 | |
|---|---|
| Fr. Christudas M. | 22 |

# மறைமாவட்டச் செய்திகள்

## தமிழக ஆயர் பேரவை

இவ்வாண்டைய தமிழக ஆயர் பேரவையின் அரையாண்டுக் கூட்டம் திருச்சியில் வைத்து அக்டோபர் 13 ஆம் தேதி நடைபெற்றது. இதில் கீழைத்திருச்சபை ஆயர்கள் அரைநாள் கூட்டத்தில் பங்கேற்றனர். ஆயர்கள் கோவிட் – 19 பாதிப்புகளைக் குறித்தக் கவலையை வெளியிட்டு செப வாக்குறுதி அளித்தனர். நமது ஆயரும் பங்கேற்றார்.

## பங்குகளை சந்தித்தல்

புதிதாக நியமனம் பெற்று பங்குப்பொறுப்பேற்றிருக்கும் தந்தையர்களின் பங்குகள் ஆயர் அவர்களால் சந்திக்கப்பட்டன. அன்னிக்கரை, தடிக்காரக்கோணம், படந்தாலுமூடு, ஆறுகாணி, நித்திரவிளை, சூசைபுரம், பரைக்கோடு, வயலங்கரை, ஆனையடி மற்றும் முழுக்கோடு பங்குகள் சந்திக்கப்பட்டன.

## 60 ஆண்டுகள் நிறைவு செய்த படந்தாலுமூடு திருஇருதய ஆலயம்

படந்தாலுமூடு திருஇருதய ஆலயம் 60 ஆண்டுகளைக் கடந்திருக்கிறது. 23.10.2020 அன்று சிறப்புத் திருப்பலி ஆயர் அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 60 ஆண்டுகளுக்கு முன்னர் 21 நபர்களுடன் எளிமையான முறையில் ஓலைக்குடிலில் தொடங்கப்பட்ட இப்பங்கு தற்போது 167 குடும்பங்களுடன் உயர்ந்து நிற்கிறது.

## உறவியம்ப் பணிக்குழு

அக்டோபர் 28, 2020 அன்று மறைமாவட்ட உறவிய பணிக்குழு சார்பாக இணையதள கூட்டமானது ஆயர் அவர்கள் தலைமையில், உறவிய ஊக்குவிப்பாளர்கள் பங்கேற்க நடைபெற்றது. மறைமாவட்ட, மறைவட்ட மற்றும் பங்குவாரியான ஊக்குவிப்பாளர்களை நியமித்து பயிற்சி அளிக்கும் பணி நிறவடைந்துள்ளது. வரும் நாட்களில் இயக்குநர் தந்தை அஜின் ஜோஸ், உதவி இயக்குநர் தந்தை ஜெபனேஷ் மற்றும் செயலர் அருட்சகோதரி ஜோதிஸ் FCC ஆகியோர் தலைமையில், பொதுநிலையினருக்கான பயிற்சிகள் வரும் நாட்களில் அளிக்கப்படும். மறைமாவட்ட வெள்ளிவிழா செயல்திட்டம் இக்கூட்டங்களுக்கான விவாதப்பொருளாக இருக்கும். ஜனவரி மாதம் முதல், உறவிய வாரியான செயல்திட்ட விளக்கக்கூட்டங்கள் நடத்தப்படும்.

## முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலயப் பொன்விழா

முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலயம் 50 ஆண்டுகளை எய்த உள்ளது. பொன்விழா தொடக்கச் சிறப்புத் திருப்பலி ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் 30.10.2020 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் அருட்தந்தை ராபின் ஜோஸ் அவர்கள் எழுதிய ஜார்ஜியார் குறித்தப் பாடல் வெளியிடப்பட்டது.

# பொதுத் தகவல்கள்

*24.10.2020* அன்று ஆயரின் ஆலோசனை மன்றமும் வெள்ளிவிழா நடுவண் கண்காணிப்புக்குழுவும் தக்கலை சங்கமத்தில் வைத்து கூடியது.

## அருட்சகோதரி சௌம்யா தெரஸ் FCC அவர்களின் முதல்வார்த்தைப்பாடு

சகோதரி சௌம்யா தெரஸ் அவர்கள் FCC மாகாணத் தலைமையகமான அழகிய மண்டப தலைமை சிற்றாலயத்தில் வைத்து துறவற உடை ஏற்று, முதல் வார்த்தைப்பாடு செய்தார். திருப்பலியை ஆயர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். இச்சகோதரி தடிக்காரன்கோணம் புனித ஜோசப் திருத்தொண்டு நிலையத்தைச் சார்ந்தவர். இவருடைய மூத்த சகோதரி அவர்கள் FCC அருட்சகோதரியாக உள்ளார்.

## குருக்கள் மற்றும் துறவறத்தார் சங்கமம்

இவ்வாண்டைய குருக்கள் மற்றும் துறவறத்தார் சங்கமம், 2020, நவம்பர் 14 அன்று, வெள்ளிவிழா, பொன்விழா கொண்டாடும் அருட்தந்தையரும் அருட்சகோதரிகளும் பங்கேற்க, தக்கலை சங்கமத்தில் வைத்து எளிதான முறையில் நடைபெறும். இதில் கூரியா உறுப்பினர்களும் மறைவட்ட முதன்மைத் தந்தையர்களும் பங்கேற்பார்கள். காலை 9.30 மணிக்குத் திருப்பலிக்கு ஆயர் அவர்கள் தலைமை ஏற்பார்கள்

## மறைமாவட்ட தினம்

வழக்கமாக மறைமாவட்ட தினம் வருடந்தோறும் நவம்பர் 11 அன்று மறைமாவட்ட அளவில் கோலாகலமாக நடத்துவது வழக்கம். இவ்வாண்டு பெருந்தொற்றுக் காரணமாக, இணையம் வழியாக நவம்பர் 08, 2020 அன்று பிற்பகல் 5.00 மணிக்கு ஆயர் அவர்களின் சிறப்பு ஆசியுரையுடன் நடைபெறும். அன்றைய தினம் பங்குகளில் பிற்பகல் 3.30 மணிக்குச் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சிறப்பு நிகழ்வை இணையம் வழியாக மக்கள் பங்கேற்கும் விதமாக பங்குகளில் ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்படுகிறது. கூட்டத்தில், பிரேஷித தாரம் விருது பெற்ற திரு மரியதாஸ் அவர்களும், மாவட்ட கல்வி அலுவலராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் திருமதி ஷெர்லின் விமல் அவர்களும் கவுரவிக்கப்படுவார்கள்.

---



## CATECHISM
## மறைக்கல்வி

வாழ்வின் வழியை நாள் அறியச் செய்வீர். உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு. (திரு.தூத 2:28)

மறைக்கல்வி இணையவழி வகுப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன. 2020 அக்டோபர் முதல் பங்குகளில் மாணவர்கள் பங்கேற்க வகுப்புகள் தொடங்க அறிவுறுத்தப்படுகிறது.

| 2020, நவம்பர் மாத முக்கிய நிகழ்வுகள் | |
|---|---|
| 08 | பங்குகளில் மறைமாவட்ட தினக் கொண்டாட்டம் |
| 11 | மறைமாவட்ட நிறுவன நாள் |
| 14 | குருக்கள் மற்றும் துறவியர் சங்கமம் |
| 17 | அருட்தந்தையர் கூட்டம் |

# BISHOP'S ENGAGEMENTS NOVEMBER 2020

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| **1** | **Sun** | **06.15 pm** | **Kalluvilai: Holy Qurbana** |
| 2 | Mon | 06.00 pm | Bishop's House: Visit of SABS Provincial |
| 3 | Tues | 07.00 pm | Soosaipuram: SABS Jubilee Holy Qurbana |
| 4 | Wed | 0.9.30 am | Bishop's House: Curia meeting |
| 5 | Thu | 02.30 pm | Sangamam: Meeting with Choir Members of the Diocese |
| 6 | Fri | 06.00 pm | Visit to Pilankalai Parish |
| 7 | Satur | 06.00 pm | Visit to Kanyakumari CMI fathers |
| **8** | **Sun** | **03.30 pm** | **Sangamam: 24th Diocesan day Celebration** |
| 9 | Mon | 10.00 am | Forane Vicars meeting |
| 10 | Tue | 11.00 am | Visit of Vincentian Provincial and the Team |
| 11 | Wed | <br>04.00 pm | Diocese Foundation Day<br>>>> Selam |
| 12 | Thu | 07.00 am | Selam: TNBC Health Commission Meeting >> Trichy >>>Thuckalay |
| 13 | Fri | 06.00 pm | Athencode: Parish Visit |
| 14 | Sat | 09.30 am | Sangamam: Jubilee Qurbana of Priests and Religious of the Diocese |
| **15** | **Sun** | **10.00 am**<br>**02.00 pm** | **Thettiodu: Holy Qurbana**<br>**Online: Tamilnadu Religious Doctors' Forum conference** |
| 16 | Mon | | Bishop's House |
| 17 | Tues | 09.30 am | Sangamam: Priests Conference |
| 18 | Wed | | Bishop's House |
| 19 | Thu | 03.00 pm | Mukootukal : Visit to Minor Seminary and Marian Night |
| 20 | Fri | 06.00 pm | Kattathurai: Parish Visit |

| | | | |
|---|---|---|---|
| 21 | Sat | 03.00 pm | Kalluvilai: KKSSS and Parish visit |
| **22** | **Sun** | **09.30 am**<br>**03.30 pm** | **Palapallam: Church Feast Holy Qurbana**<br>**Karode: Holy Qurbana and Auditorium Blessing** |
| 23 | Mon | 02.00 pm | Christurajapuram: School and Parish visit |
| 24 | Tues | 07.00 am | Visit to Thirunelveli >>> Nanguneri >>> Kayathar and Thenkasi Missions |
| 25 | Wed | 09.30 am | Bishop's House: Curia Meeting |
| 26 | Thu | 09.30 am<br>06.00 pm | Karode: marriage Holy Qurbana<br>Palugal: Parish Visit |
| 27 | Fri | 09.00 am | Prayer day |
| 28 | Sat | | Bishop's House |
| **29** | **Sun** | **07.00 am**<br>**07.00 pm** | **Manjalumoodu: Holy Qurbana Parish hall blessing Kandan-vilai: YMCA Christmas Gathering** |
| 30 | Mon | | Bishop's House |

Rev. Fr. Robin Jose, Bishop's Secretary

---

## மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர் மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்வு (DEO)



வாறுதட்டுப் பங்கைச் சேர்ந்த திருமதி ஷெர்லின் விமல் அவர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்த் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்று தேர்வாகியுள்ளார். அன்னார் அவர்கள், வின்செந்தியச் சபை முதன்மைப்பணியாளர் திரு. றாபி அவர்களின் மகள் ஆவார். அன்னாரை, மறைமாவட்டம் மனமார வாழ்த்தி மகிழ்கிறது.



28.10.2020
HOLY QURBANA, BAPTISM
ANAYADI



30.10.2020
GOLDEN JUBILEE
INAUGURATION
MUNCHIRAI



15.08.2020
VINCENT DE PAUL
NEW BOARD MEMBERS
INSTALLATION



24.11.2020
KUZHANDAI ISO IYAKKAM
ANIMATORS'
TRAINING
MANJALUMOODU

02.10.2020
TCYM
ANNIVERSARY
THETTIYODE





10.10.2020
SINAI MAGAZINE
RELEASE
THETTIYODE





31.10.2020
FIRST PROFESSION
FCC PROVINCE
AZHAGIYAMANDAPAM

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570